பல பொருட்களின்
காட்சிக் கலைக்கூடம்
- மணிக்கூடுகள்
- நீரிறைக்கும் யந்திரங்கள்
- ஈஸ்டன் சைக்கிள்கள்
- பாதணிகள், பாத்திரங்கள்
- பாவனைப் பொருட்கள்
- விளையாட்டுச் சாமான்கள்
அனைத்தும் நியாயவிலை
சி. சின்னத்துரை
அன் பிறதர்
யாழ்ப்பாணம் - போன்: 284

பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 20 ஆனி: 20 றஜட்: 27 இதழ்: 142
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 4-7-78

உலக அழகுராணிகளின்
உன்னத தேர்வு.... "பாட்டா"
உங்கள் பாதங்களுக்கும்
உன்னத தேர்வு .... பாட்டா
குழந்தைகளின்
பாட்டா குதூகலச் சின்னம்.
யாழ்நகர் மக்களின் அபிமான
நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
சி. சின்னத்துரை
அன் பிறதர்,
யாழ்ப்பாணம். போன்: 284.

CAMPUS LIBRARY UNIVERSITY JAFFNA
PERIODICALS DIVISION
RECEIVED
1978 -7-

### மேயர் துரையப்பா கொலை வழக்கு விசாரணை

# 1-ம் 2-ம் எதிரிகளை கார்ச்சாரதி

# அடையாளம் காட்டினர்

## பூர்வாங்க ஆட்சேபனை மீது 7-ம் திகதி தீர்ப்பு

[கொழும்பு]

யாழ்.மேயர் துரையப்பா கொலைவழக்கு விசாரணை, நேற்று கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி திரு. ஜே. எப். ஏ. ஸோசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, இரண்டாவதாக சாட்சியமளித்த கார்ச்சாரதி சிவனு 1-வது எதிரி கலாபதியையும் 2-வது எதிரி கிருபாகரனையும் நீதிமன்றத்தில் வைத்து அடையாளம் காட்டினர்.

முதலில் சாட்சியமளித்த வயோதிபமாது கண்மணி, எதிரிகளில் எவரையும் அடையாளம் காட்டவில்லை.

### ஐவர் மீது குற்றச்சாட்டு

1975ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ம் திகதி யாழ்.மேயர் துரையப்பா கொலை செய்யப்பட்டது தொடர்பாக 1. பால சுப்பிரமணியம் கலாபதி, 2. வி. ஏ. கிருபாகரன், 3. எஸ். லோகநாதன், 4. வி.சிறிதரன் 5. ரி. சந்ததியார் ஆகிய ஐவரும் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். இந்த வழக்கில் 119 சாட்சிகள் உள்ளனர். இரண்டு பெரும் பனைமரக்குற்றிகள் உட்பட 35 சாட்சிப் பொருள்கள் இருக்கின்றன.

கொழும்பு ஹல்ஸ்டோர்ப்பிலுள்ள உயர் நீதிமன்றகட்டிடத்தில், மேல்நீதிமன்ற நீதிபதி திரு.ஜே.எப்.ஏ. ஸோசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

### பூர்வாங்க ஆட்சேபனை

விசாரணை ஆரம்பமாவதற்கு முன்னர், 2-வது எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு. செருபிம் ஒரு பூர்வாங்க ஆட்சேபனையைக் கிளப்பினார்.

'எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றப்பத்திரிகைகளில் முதலாவது எதிரியும் மற்றையோரும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 'மற்றையோரும்' என்றால், இங்கிருப்பவர்களா அல்லது காணமற்போய் விட்டதாக பகிரங்க சுவரொட்டிகள் மூலம் விளம்பரப்படுத்தப்பட்டவர்களுமா?' என்று கேட்டுவிட்டு; "ஜூரிகள் முன்பாக விசாரணை நடைபெறுகிறது. இந்த வழக்கின் இரண்டாவது எதிரியான கிருபாகரனை சுவரொட்டிகளில் விளம்பரப்படுத்தி பாரதூரமான குற்றத்தை புரிந்திருப்பதாக விளம்பரப்படுத்தப் பட்டதன் மூலம், ஜூரர்கள் மனதில் தப்பான அபிப்பிராயம் ஏற்பட இடமுண்டு" என்று கூறினார்.

நீதிபதி: அப்படியானால், ஜூரர்கள் மனதிலிருந்து இது மறையும்வரை விசாரணையை ஒத்திவைப்போமா? என்று கேட்டுவிட்டு;

### 7-ல் தீர்ப்பு

2-வது எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி கிளப்பிய பூர்வாங்க ஆட்சேபனை மீதான தீர்ப்பை இம்மாதம் 7-ம் திகதி வழங்குவதாக நீதிபதி தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து வழக்கு விசாரணை ஆரம்பமானது.

### சுற்றவாளி என்றனர்

விசாரணை ஆரம்பமாவதற்கு முன்னர், எதிரிகள் ஐவரிடமும் நீதிபதி "நீங்கள் குற்றவாளிகளா அல்லது சுற்றவாளிகளா" என்று கேட்டதற்கு, எதிரிகள் ஒவ்வொருவரும் தாங்கள் சுற்றவாளிகள் என்று பதிலளித்தனர்.

### கண்மணி சாட்சியம்

முதலில், சம்பவம் நடைபெற்ற இடத்தில் கடை வைத்திருந்த வயோதிபமாது கண்மணி சாட்சியமளித்தார்.

"சம்பவம் நடைபெற்ற தினமன்று, சந்தியின் முன்பாக மூன்றுபேர் நின்றனர். அப்போது காலை ஒன்பது மணியிருக்கும். பகல் 12மணிக்கும் 12-30 மணிக்குமிடையே துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது. அப்போது, மேயர் துரையப்பாவுடன் காரில்வந்த யோகநாதன், ராஜரத்தினம் ஆகியோர் ஓடிவந்தனர்"

### குறுக்குவிசாரணை

இக்கட்டத்தில் எதிரிகள்சார்பில்ஆஜரான சிரேஷ்டசட்டத்தரணி திரு. எம். சிவசிதம்பரம் சாட்சியைக் குறுக்குவிசாரணை செய்தார்.

சட்டத்தரணி: அங்கு எத்தனை பேர் நின்றனர்?

கண்மணி: மூவர்.

சட்டத்தரணி: சோடா வங்க எத்தனை போ வந்தனர்.

சாட்சி: ஒருவர்தன் வந்தார்.

சட்: அவரை உங்களால் அடையாளம் காட்ட முடியுமா?

சாட்சி: அடையாளம் காட்டமுடியும்.

இக்கட்டத்தில், எதிரிகள் ஐவரும் சாட்சிக்குச் சுட்டிக் காட்டப்பட்டனர். ஆனால் சாட்சி எவரையும் அடையாளம் காட்டவில்லை.

இதனைத்தொடர்ந்து யாழ். மேயர் துரையப்பா கொலை செய்யப்பட்ட நேரத்தில் அவரது கார்ச் சாரதியாகவிருந்த சிவனு சாட்சியமளிக்கஅழைக்கப்பட்டார்.

### சாரதி சாட்சியம்

சாரதி சிவனு சாட்சியமளிக்கையில், "1975ம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் 27ம் திகதி காலை 9.30 மணியளவில் வீட்டிலிருந்து புறப்பட்டோம். பகல் 12-30 மணியளவில் வாடி வீட்டிலிருந்து பொன்னாலைக் கோவிலுக்குப் புறப்பட்டோம். போகும்வழியில், பகல் 1-15 மணியளவில் ராஜரத்தினம் அவர்களையும் யோகநாதன் அவர்களையும் பெரியகடையில் காரில் ஏற்றுக்கொண்டு கோவிலுக்குச் சென்றோம். கோவிலுக்குப் போய், காரை விட்டு இறங்கி ஐயா கும்பிடப்போனபோது, துப்பாக்கிச்சூட்டுச் சத்தம் கேட்டது. காரிலிருந்து சுமார் 15 யார் தூரத்தில் அவர் சுடுபட்டுக்கிடந்தார். இச் சம்பவத்தின்போது நான் காருக்குள் இருந்தேன். என்னை நோக்கி மூவர் வந்தனர். இவர்களில் இருவர் எனது

(6ம் பக்கம் பார்க்க)

## சங்கானையில் ஒருவர் கொலை

(சங்கானை)

நேற்று மாலை சங்கானை மீன்சந்தை வீதியில், ஆயுர்வேத வைத்தியர் அப்புஹாமி குணதிலகா (61 வயது) அவரது வீட்டில் கொலை செய்யப் பட்டுக்கிடந்தார்.

மாத்தறையைச் சேர்ந்த இவர் கடந்த 30 வருடகாலமாக சங்கானையில் வாழ்ந்து வருவதாகவும் ஆயுர்வேத வைத்தியர் இவர் என்றும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

வீட்டிலிருந்தபோது வீட்டுக் கதவை உடைத்து, இவரை பொல்லால் அடித்து கொலை செய்திருக்கலாமென்று பொலிசார் நம்புகின்றனர். இக்கொலை தொடர்பாக ஒருவரை பொலிசார் தேடுகின்றனர். இவருக்கு மனைவியும், இரண்டு பிள்ளைகளும் உண்டு. பிரேத பரிசோதனை இன்று நடைபெறும்.

## அரசியலிலிருந்து வாஜ்பாய் விலகல் அவசியமில்லை

### பிரதமர் மொரார்ஜி தேசாய் கருத்து

புதுடில்லி, ஜூலை. 3

இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. வாஜ்பாயை அமைச்சரவையிலிருந்து வெளியேறத் தாம் அனுமதிக்கப் போவதில்லையென்று பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் கூறினார்.

அரசியலிலிருந்துவெளியேறி தாம் கட்சிப்பணிகளில் தம்மைத்தீவிரமாக ஈடுபடுத்த விரும்புவதாக திரு.வாஜ்பாய் தெரிவித்ததற்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசியலிலிருந்து கொண்டே கட்சிப்பணிகளில் ஈடுபடலாம் என்றும் திரு.தேசாய்கருத்துத் தெரிவித்துள்ளார்.

## ராஜா முஹம்மது - அமீர் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள தமிழக கிராமத் தொழில்துறை, பால் வளத்துறை, வக்புவாரிய அமைச்சர் ஜனாப் கே. ராஜா முஹம்மது இன்று காலை பத்து மணிக்கு எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தை அவரது அலுவலகத்தில் சந்திப்பார்.

இதற்கு முன்னர் ஜனாப் ராஜா முஹம்மதுக்கு திரு.அ. அமிர்தலிங்கம் காலைப்போசன விருந்தளிப்பார். (ம)

## ஆவரங்காலில் தேசியமாநாடு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக்கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு, ஆவரங்கால் சிவன் கோவில் முன்றலில் நடைபெறுமென்று மாநாட்டுக்குழுவினர் தெரிவித்துள்ளனர்,

மாநாடு இம்மாதம், 29, 30ந் திகதிகளில் திட்டமிட்டபடி நடைபெறுவதால் அதற்கான ஒழுங்குகள் தீவிரமாக நடைபெறுகின்றன.

மாநாட்டுக்குழுவினர் நிதி திரட்டும்பணியில், கொழும்பு, யாழ்ப்பாணம், மலையகம், மட்டக்களப்புப் பகுதிகளில் ஈடுபட்டு வருகின்றனர். (கெ)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கிளிநொச்சியில் கட்டிடம் கட்டுவதற்கு ஏற்ற 80 பேர்ச் காணி உடன் விற்பனைக்குண்டு. ஈஸ்வரன் தியேட்டருக்கு எதிராக உள்ளது. கண்டிரோட்டிலிருந்து செல்ல வசதியானது. விலை பேர்ச் ஒன்றுக்கு: ரூபா 500/- எழுத்தில் விண்ணப்பிக்கவும். விளம்பரதாரர் மே/பா வேலுப்பிள்ளை புத்தகசாலை, சாவகச்சேரி. 9732

இறைச்சிக்கான கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. P. Leonard பலாலி சந்தி, காங்கேசன் துறை. 9734

25 சிறீ 8316 மசி பெர்குசன் (Massey Furgusion) மிசின் மாத்திரம் விற்பனைக்குண்டு. காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை பார்வையிடலாம். தொடர்பு கொள்க. டாக்டர் K. பூலோகசுந்தரம், 361, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 9720

### தேவை

யாழ்ப்பாணம் நகரிலுள்ள சட்டத்தரணிக்கு, நல்ல தமிழறிவும், ஆங்கிலத்தில் திறமையுடன் 'டைப்' செய்யத் தெரிந்தவருமான ஒரு லிகிதர் தேவை. வேலைநேரம்: கிழமை நாட்களில் மாலை நேரத்தில் 4-00 மணி முதல் 7-00 மணி வரை. சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை நேரம். விளம்பர இல: 9731, C/O, ஈழநாடு, யாழ்ப்பாணம். 9731

மின்சாரம், தண்ணீர் விநியோகம் உட்பட சகல நவீன வசதிகளும் கொண்ட விசாலமானவீடு ஒன்று யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அல்லது அதற்குச் சமீபமாக கொழும்பிலுள்ள தனியார் அபிவிருத்தி நிறுவனமொன்றின் கிளை அலுவலகத்திற்குத் தேவை. மாதவாடகை, முற்பணம் ஆகிய சகல விபரங்களையும் அறிவித்து தபால் பெட்டி எண் 16, தெகிவளை என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். 9696

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


# மிளகாய் செடிகள் நோயினால் பாதிப்பு

(சங்கானை)

மிளகாய்ச் செடிக்கு அழுக்கணவன் என்னும் நோய் வெகு விரைவாகப் பீடித்து வருகின்றது. வலிகாமம் மேற்கும் பகுதியில் சங்கானை, கண்டிவிப்பாய், பிராம்பற்று, பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை, தொல்புரம், மூளாய், வட்டுக்கோட்டை, அராலி, சங்கரத்தை ஆகிய இடங்களில் இந்நோய் ஆரம்பித்துளளது.

இந்த நோய், ஆரம்பத்தில் அடிமரத்திலிருந்து வெள்ளைப் பூஞ்சணவன் போல் படர ஆரம்பித்து முழு மரத்தையும் பீடித்து, இலைகளையும் கறுக்கச்செய்து மரத்தைப் படச் செய்கின்றது.

இந்நோய், ஒன்றில் ஆரம்பித்து ஏனைய மிளகாய்ச்செடிகளிலும் தொற்றிவருவதால் விவசாயிகள் அஞ்சுகின்றனர்.

பலவித மருந்துகளை விசிறியும் நோயைக் கட்டுப்படுத்த முடியவில்லையென இப்பகுதி விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். (க)

"யாரையும் நம்பாதே

# காதலில் தோற்றவர் நண்பனுக்கு இறுதிக்கடிதம்

(மட்டக்களப்பு)

காதலில் தோல்வியடைந்த இளைஞர் ஒருவர் கடலில் குதித்து தற்கொலை செய்துகொண்ட சம்பவமொன்று மட்டுநகரில் நடைபெற்றுள்ளது. பரிதாபகரமாக கடலுக்குப் பலியானவர் வர்த்தகரான வே. பாலச்சந்தர் (28 வயது) என்பவராவர். இவரது மரணம் குறித்து மட்டக்களப்பு நகர சடுதி மரணவிசாரணை அதிகாரி திரு. த. சிவநாதன் விசாரணை நடத்தினார். அப்பொழுது காலஞ்சென்றவரின் நண்பராகிய பால்ராஜ் அன்டனி சாட்சியமளித்த போது கூறியதாவது:-

சம்பவதினமாகிய வியாழக்கிழமை இரவுச்சாப்பாடு முடிந்து இருவரும் படுத்துவிட்டோம். மறுநாள் எழுந்து பார்த்தபோது அவரைக் காணவில்லை. அவர் செல்லக்கூடிய முக்கிய இடங்களில் தேடியும் காணவில்லை, அறையில் அவரால் எழுதப்பட்ட கடிதமொன்று அச்சமயம் இருக்கக் காணப்பட்டது. அதில் 'இந்த உலகில் யாரையும் நம்பாதே நான் இந்த உலகை விட்டுப் போகிறேன்' என்று எழுதப்பட்டிருந்தது. பகல் நாவலடி கடற்கரையில் பிரேதமொன்று கரைதட்டியிருப்பதாக அறிவிக்கப்பட்டதையடுத்து அங்கு அவர் பிணமாகக் காணப்பட்டார். மேலும் விசாரணையின்போது காலஞ்சென்றவர் ஒரு யுவதியைக் காதலித்த விபரமும் தெரியவந்ததாம். விசாரணை முடிவில் தற்கொலை மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## உபதபாலதிபர் பதவிகள்

(உருத்திரபுரம்)

கிளிநொச்சித் தொகுதியில் உள்ள முறிகண்டி, கல்மடு நகர் ஆகிய இடங்களில் உள்ள உபதபால் நிலையங்களுக்கான உபதபால் அதிபர் பதவிகளுக்குஅரசாங்கத்திடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட இடங்களைச் சேர்ந்த கிராம சேவையாளர் பிரிவில் பத்துவருடங்களுக்குமேல் நிரந்தர குடியிருப்பாளராக இருப்போர் மாத்திரமே உபதபால் அதிபருக்குவிண்ணப்பம் செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது மேற்படி விண்ணப்பங்கள் முடிவடையும் இறுதித் திகதி இம்மாதம் 11ந் திகதியாகும். (உ)

## பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு உப்பளத்தைச் சேர்ந்த சிரேஷ்ட உப்பள அதிகாரி திரு. எஸ். வேலாயுதபிள்ளை, குறிஞ்சாத்தீவு உப்பளத்தின் உற்பத்தி முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்றுச்சென்றுள்ளார் இவர் அளவெட்டி அருணோதயா கல்லூரியின் பழைய மாணவராவார்.

## இந்துமாமன்றம் ஆட்சேபம்

(கொழும்பு)

படமாளிகை கட்டுவதற்காக கதிர்காமத்தில் காணிக் குத்தகைக்குமனுச்செய்யுமாறு மொனருகலை அரசாங்க அதிபர் விடுத்த அறிவித்தலுக்கு அகில இலங்கை இந்துமாமன்றம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. இதனை இந்துமாமன்றம் வெளியிட்டுள்ள தமது 23வது ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "நாட்டின் மேம்பாட்டில் கி. அ. சங்கங்களின் பணி"

(மட்டக்களப்பு)

வாழைச்சேனையில் 3 கோடி 20 லட்சம் ரூபா செலவில் மீன் பிடி அபிவிருத்தித் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படவிருக்கிறது.

இத்தகவலை மீன்பிடி அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா மட்டக்களப்பில் தெரிவித்தார்.

நெதர்லாந்து அரசின் உதவியுடன் அமைக்கப்படும் இத்திட்டத்தில் படகு கட்டும் தொழிற்சாலை, மீன்பிடித் துறைமுகம், மீன்களைச் சேகரித்துவைக்கும் குளிர்சாதனக் களஞ்சியங்கள் ஆகியன அமைக்கப்படுமென்றும் அவர்

(6-ம் பக்கம் பார்க்க)

## ரதோற்சவம்

ஈழத்து வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயங்களுள் இணுவில் ஸ்ரீ கந்தசாமி ஆலயமும் ஒன்ருகும். இசைக் கலைஞரும், வர்த்தகர்களும், விவசாயப் பெருங்குடி மக்களும் செறிந்து வாழும் இவ்வூரின் மத்தியில் இந்த ஆலயம் அமைந்துள்ளது. ஓர் ஆலயம் சிறந்து விளங்குவதற்கான அத்தனை சிறப்பு அம்சங்களும் இங்கு காணப்படுகின்றன. 'நொச்சி மரத்தைநாட்டி அவ்விடத்தில் வீற்றுஇருக்கப்போவதாக ஒரு சிறுவன் கூறிமறைந்ததாக' கர்ணபரம்பரைக் கதையுண்டு. தலத்தில் சிறந்துவிளங்கும் இந்தஆலயம், தீர்த்தத்திலும் மகிமைகொண்டதாக விளங்குகிறது. அருகில் உள்ள வைரவர் ஆலயத்தின் முன்புள்ள தீர்த்தகிணறு அடியவர்களால் விசேடமாக போற்றப்படுகின்றது. இங்கு எழுந்தருளியிருக்கும் ஆறுமுகப்பெருமான் பச்சிளம் பாலனைப்போலவும், கட்டிளங்காளை போலவும், சூரனைசம்மாரம் செய்தபோர் வீரனைப்போலவும், வள்ளி மணாளனைப் போலவும் காட்சியளிக்கின்ருன்.

இத்தகைய சிறப்பு மிக்க இவ்வாலயத்தில் தமிழக அறிஞர்களும், பக்தர்களும் வந்து தரிசித்துச் சென்றுள்ளனர். கிருபானந்தவாரியார், பித்துக்குளி முருகதாஸ், சித்தூர் சுப்பிரமணியபிள்ளை மதுரை சோமு, சீர்காழி கோவிந்தராஜன் போன்ஞேர்கள் இவர்களுள் முக்கியமானவர்கள் யாவரும் முருகபக்தர்கள் தாம் அண்மையில் இவ்வாலயத்தின் ஆறுமுகக்கடவுளின் தோற்றத்தைகண்டு மெய் சிலிர்த்த மதுரை சோமு மயங்கியே வீழ்ந்துவிட்டார்.

இன்றைய தேர்த்திருவிழாவில் காலை 7 மணியளவில் சிறந்த அபிசேகங்கள் பூசைகள் நடைபெற்று விநாயகர், சோமசுந்தரர், ஆறுமுகக் கடவுள் என்பவர்கள் எழுந்தருளி வீதி உலாவரும் காட்சி இடம் பெறும். திருத்தேர்கள் வரிசைக்கிரமமாக வரும் காட்சி யாவர் மனதையும் கவரக் கூடியதாக இருக்கும்.

--இணுவை கணபதி கணேசன்

## கொக்குவில் இந்துக்கல்லூரி விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

'மாணவர் வாழ்வில் விளையாட்டுக்கள் முக்கியமானவை. ஆரோக்கிய சூழ்நிலை இருந்தால்தான், மாணவர் நன்கு கல்விபயில வாய்ப்புண்டு.' என்று கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டியில் அதிபர் திரு. மா. மகாதேவன் தமதுரையில் குறிப்பிட்டார்.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. எம். சுப்பிரமணியம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

தொடர்ந்து அதிபர், 'வாழ்வில் வெற்றி, தோல்வி மாறி மாறிவரும். அவை முக்கியமல்ல என்பதை இங்கு மாணவர் சிந்திக்கவேண்டும். இப்போட்டிகள் மாணவரிடையே ஒற்றுமை, ஒத்துழைப்பு மனோபாவம் ஆகியவற்றை உருவாக்கவே முக்கியமாக நடாத்தப்படுகின்றன என்ருர்.

திரு. எம். சுப்பிரமணியமும் உரையாற்றினார். திருமதி சுப்பிரமணியம் பரிசில்களை வழங்கினார். (ச-உ)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

வழ. இல. M B/14540

1. செல்லத்துரை சபாரத்தினமும்
2. பெண் குணமணியும்
   கரம்பன் மேற்கு, ஊர்காவற்றுறை.

வாதிகள்

எதிராக

1. வேலாயுதம் நடராசாவும்
2. பெண் தருமலெட்சுமியும்
   கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறை.

பிரதிவாதிகள்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் M B/14540-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1978-ம் ஆண்டு ஆடி மாதம் 25-ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் (25-7-78) அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த பிரதிவாதிகள் குறித்த வாதிகளுக்கு ரூபா 4,000/-வும் மேலும் ரூபா 2000/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 15%வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1974-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12-ந் திகதியிலிருந்து தீர்வைத்திகதியாகிய 1975-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 17-ந்திகதி வரையுமானவட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு5 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 605/15 சதம் (இதில்கொடுக்கப்பட்ட தொகை ரூபா500/-)கொடுக்கவேண்டியிருப்பதாலும்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று கரம்பன் இறை.

பரவைப்புலம் நெ. பர. 6 ஆறும் குளி 6 ஆறும் விடுகுசினியும் மற்றும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கும் வடக்கும் போல் சிங்கராயரின் ஆதனம், மேற்கு சுப்பர் முத்துக்குமாருவுக்கும் மங்களவாரமடத்துக்குமுரிய ஆதனங்கள், தெற்கு சின்னத்தம்பி நாகலிங்கத்துக்கும் கந்தையா சின்னராசாவுக்குமுரிய ஆதனங்கள். இன்னும் இதன் தெற்கெல்லை காணியின் மேற்கெல்லையருகாக இக்காணியால் விடப்பட்ட ஒன்பது அடி அகலமும் ஐம்பத்திரண்டு அடி நீளமும் கொண்ட அதாவது 468 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட ஒழுங்கை நிலமும் சேர்த்து இதடங்கலும்.

சி. செ. பாலசிங்கம்,
கொமிஷனரும்
மதிப்பாளரும்,
9730

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை,
15-6-78.


SSRR இ. கி. மீ. நி.

## தேவை

### 1. உதவிக் கணக்காளர்:

தராதரம்: I. C. M. A. பகுதி II or III அல்லது சமமான வேறு தகைமையுடையோர்

வயது:- 30-40

தகைமை:- தகுந்த ஆங்கில அறிவும், நிர்வாகத் திறனும், கடமையுணர்ச்சியும் உடையவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுதிகதி:- 9-7-78

சம்பளம்:- நேரில் பேசிக்கொள்ளலாம்.

### 2. அலுவலகச் செயலாளர்: [பெண்]

தராதரம்:- G.C.E. (O/L) ஆங்கிலம் ஒருபாடமாக 5 திறமைச்சித்திகள் இருத்தல் வேண்டும்.

வயது:- 20-28

தகைமை:- காரியாலய அலுவல்களில் அனுபவம் உடையவராகவும் திறமையாக செயலாற்றுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்தும் கடிதத் தொடர்பு கொள்ளக் கூடியவராகவும், ஆங்கிலம் பேசக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

3. தமிழ் தட்டச்சு, சுருக்கெழுத்தும் தெரிந்திருந்தல் விரும்பத்தக்கது.

முடிவு திகதி:: 9-7-78.
சம்பளம்: தகுதிக்கேற்ப வழங்கப்படும்.
9733

இ. கி. மீ. நி.
70, புங்சன்குள வீதி,
யாழ்ப்பாணம்.

ஈழநாடு
The Eelanaadu

## விடுமுறை நாட்கள்

நமது நாட்டில் விடுமுறை நாட்கள் அதிகமென்றும் இதைக் குறைப்பது பற்றிப் பொதுநிர்வாக அமைச்சு ஆலோசனை செய்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசாங்க ஊழியர்களில் பலரும் வருடத்தில், பாதி நாட்கள்தான் பணியாற்றுகிறார்கள் என்று பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவும் பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் மேஜர் மொண்டேகு ஜெயவிக்கிரமாவும் சமீபவாரங்களில் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஒரு நாடு முன்னேற வேண்டுமானால் சகலதுறைகளிலும் கடின உழைப்பு அவசியம். விவசாயிகளும், தொழிலாளிகளும் மட்டும் கடுமையாக உழைத்தால் போதாது. அரசாங்க அலுவலகங்களில் பணியாற்றுபவர்களும், தனியார் நிலையங்களில் பணி புரிபவர்களும் மட்டுமல்லாமல் ஒவ்வொரு குடும்பமும் என்னென்ன முறையில் நாட்டின் முன்னேற்றத்துக்கு உதவ முடியுமோ அவற்றில் ஈடுபட வேண்டியது அவசியம்.

இரண்டாம் உலகமகா யுத்தத்தில் அணுகுண்டுக்கு இலட்சக்கணக்கான மக்களைப் பலிகொடுத்து அழிந்துபோன ஜப்பான் நாடு இன்று சகல துறைகளிலும் முன்னணியில் நிற்கிறது. நவீனத்தின் முன்னேற்றத்துக்கும் மற்றும் பல சிறிய நாடுகளின் முன்னேற்றத்துக்கும் அந்த நாட்டு மக்களின் கடின உழைப்புத்தான் காரணம். அயல்நாடான இந்தியாவில் பல பிரச்னைகள் இருந்தாலும் அதன் முன்னேற்றம் குறைந்ததல்ல.

நமது அரசியல்வாதிகள் கடின உழைப்பைப்பற்றியும் நாட்டுப்பற்றைப்பற்றியும் பேசுவது வழக்கம்.

ஆனால் கடின உழைப்புக்கும் நாட்டுப்பற்றுக்கும் அடிப்படையை அவர்களில் பலர் மறந்துவிடுவதுண்டு.

உழைப்பவனுக்கு ஓய்வு அவசியம் தேவை. நமது நாட்டில் போயா தினங்கள் நான்கும் சில காலம் விடுமுறையாக்கப்பட்டன. அதனால் ஏற்பட்ட பொருளாதாரப் பாதிப்பும் உற்பத்தித் தேக்கமும் அந்த விடுமுறையை மறுபரிசீலனை செய்ய வைத்தது. இப்போது மாதத்தில் ஒரேயொரு போயாதினம் மட்டுமே விடுமுறை வழங்கப்படுகிறது.

எண்ணை. எரிபொருள் தட்டுப்பாடும் விலைஉயர்வும் ஏற்பட்டபோது முன்னைய அரசாங்கம் அதில் செலவைச் சுருக்கிச் சிக்கனத்தைப் பேணுவதற்காக இறுதி நாட்களான சனிக்கிழமையையும் அரசாங்க விடுமுறையாக்கியது. இதன் பலாபலன்பற்றிய கணிப்புப்பற்றித் தெரியவில்லை.

ஆயினும் இன்று அரசாங்கம் துரிதமாக நிறைவேற்றுவதற்கான புதிய திட்டங்களைத் தீட்டி வருகிறது. தினமும் புதிய திட்டங்கள் பற்றிய அறிவிப்புக்களே வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவற்றைச்செயல்படுத்த வேண்டுமானால் ஓய்வு நாட்களைக் குறைத்து உழைக்கும் நாட்களை அதிகரிக்க வேண்டியது அவசியம். முன்னேற்றமடைந்த, முன்னேறிவரும் நாடுகளில் பின்பற்றப்படும் முறைகளையும் ஆராய்ந்து விடுமுறை நாட்கள்பற்றி அரசாங்கம் மறுபரிசீலனை செய்வது நல்லது.

# "யாழ். நகரின் வனப்பில் மக்களுக்கு அக்கறையில்லையே"

## விசேட ஆணையாளர் கவலை

(யாழ்ப்பாணம்)

"தமிழ்மக்களிடையே சுயநல சிந்தனை உள்ளது. குறிப்பாக யாழ். நகர மக்கள் சுயநலம் கொண்டோராய் வாழ்கின்றனர்."

இவ்வாறுயாழ்.மாநகரசபை விசேட ஆணையாளர் திரு.கே. சிவஞானம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் வருத்தப்பட்டுக்கொண்டார்.

யாழ். ட்றிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற மெதடிஸ்த சபையின் 164-ம் ஆண்டுவிழாவில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கவலை தெரிவித்தார்.

வண. எம். ஏ. இரத்தினராஜா விழாவிற்குத் தலைமை தாங்கினார்.

விசேட ஆணையாளர் திரு. சிவஞானம் தொடர்ந்து பேசுகையில்கூறியதாவது;- "யாழ் நகர மக்கள் பொதுநல எண்ணம்கொண்டு சமுதாய முன்னேற்றத்தைப்பற்றிச் சிந்திக்கத் தவறிவிடுகின்றனர். இன்று யாழ்.நகரெனும் நங்கை அவலநிலையில் இருக்கக் காரணமும் இதுவே.

குப்பைகள் வீதிகளில் கொட்டி அசிங்கப்படுத்தப்படுகின்றன. இவ்விழி மாற வேண்டும். மக்களிடையே புத்துணர்ச்சியும் மறுமலர்ச்சியும் ஏற்படவேண்டும். மக்களின் உதவியின்றி எவ்வித முன்னேற்ற செயல்களையும் செய்யமுடியாது. நகர முன்னேற்றத்திற்காக நான் என்னாலியன்றவற்றைச் செய்யத் தயாராக இருக்கின்றேன்" என்றார். அவர் மேலும் பேசுகையில் "மதம் மார்க்கம் போன்ற சொற்கள் ஒரே பொருளைத் தெளிவுபடுத்தினாலும் ஒவ்வொன்றும் ஆழமான கருத்துப்பொதிந்தவை. இன்று மக்கள் மத்தியில் ஆன்மீக தாகம் குறைந்துவருகிறது. ஆன்மா வளர்ச்சியுறும்போது மனிதன் பூரணமடைகிறான். சமுதாயம் முன்னேறுகிறது" என்றார்.

வண.இரத்தினராஜா தமது தலைமையுரையில், மெதடிஸ்த மிஷனரிமார்களுக்கு நாம் என்றும் கடமைப்பட்டோராயும் நன்றியுடையோராயும் இருக்கிறோம். குறிப்பாக இவர்களிடம் காணப்பட்ட அன்பு தியாகம், சேவையை நாம் மறுக்கவோ, மறக்கவோ முடியாது. வேற்றுநாட்டோராய் இருந்தும்அன்புள்ளம் கொண்டோராய், சேவைசெய்யும் நோக்குடன் பல தியாகங்களின் ஊடே பணியாற்றினர். விசேடமாக கல்வித்துறையில் அவர்கள் ஆற்றிய சேவையினை யாழ்.மக்கள் என்றுமே மறக்கமாட்டார்கள் இவர்கள் முயற்சியால் எழுந்த கல்விச்சாலைகளும், வைத்தியசாலைகளும் இன்றும் இதற்கு சான்று பகரும். இன்று கிழக்காசியாவிலேயே கல்வியில யாழ். நகர் ஓர் உயர்ந்த இடத்தை வகிப்பதற்கு வழி வகுத்தோரும் இவர்களே.

ஆகவே சமய, சமூகரீதியாக பல வகையிலும் உதவியும், ஒத்தாசையும் புரிந்த பெரியாரை நினைவு கூரும்முகமாக ஆண்டுதோறும் நாம் எமது மெதடிஸ்த சபை ஈழத்தில் உதயமான நாளை கொண்டாடுவது சாலவும் பொருத்தமானதாகும்" என்றார். (உ)

# "நாணயம்காக்கப்பட்டாலே மனித வாழ்வு முழுமை பெறும்"

## அளவெட்டியில் 'அமிர்' உரை

[பண்டத்தரிப்பு]

'யாழ்ப்பாணத்தில் கூட்டுறவு இயக்கத்தின் சிறப்பான வரலாற்றில் ஐக்கியநாணய சங்கங்களுக்கு தனியானதோர் மதிப்புண்டு. கிராமமக்கள் ஒருவரையொருவர் நன்கு அறிந்து தமக்குள் கஷ்டங்கள் ஏற்படுகின்றபோது ஒருவர்க்கொருவர் பரஸ்பர உதவிகள்செய்து கூட்டுறவு அடிப்படையில் வாழும்சிறந்ததொருமுறையை நமது முன்னோர்கள் ஐக்கிய நாணய சங்கங்கள் என்ற பெயரில் உருவாக்கினார்கள். இச்சங்கங்களின் முக்கிய நோக்கம் நாணயம்தான். உறுப்பினர் மத்தியில்நாணயம் இல்லாவிட்டால் ஐக்கியநாணய சங்கங்கள் இயங்கமுடியாது போகும். இன்று எங்கள்நாட்டில் மாத்திரமல்ல பொதுவாக மனித வாழ்க்கையிலேயே தேடிக் கண்டுபிடிக்கவேண்டிய ஒருபொருளாக இந்த நாணயம் என்பது மாறிவிட்டது. இந்த 'நாணயம்' என்கின்ற சொல்லின்மூலக்கருத்து தனது நாவைக் காத்து நடக்கின்ற தன்மையிலிருந்துதான் எழுந்தது.'

இவ்வாறு அளவெட்டி தெற்கு ஐக்கியநாணய சங்கத்தின் பொன்விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில எதிர்க்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம்குறிப்பிட்டார்.

சங்கத்தலைவர் திரு. கனகர் கந்தையா தலைமையில் அளவெட்டி அருணசலம் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:- 'இச்சங்கம் கடந்த 50 வருடங்களாக சிறப்பாக இயங்கிப் பொன்விழா கொண்டாடும் இவ்வேளையில் அதன் செயற்பாடுகளை நன்கு அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இன்று கூட்டுறவு இயக்கம் நாட்டில் பரந்து வியாபித்து நின்றாலும் ஆரம்பத்தில் ஐக்கியநாணய சங்கங்களாக இருந்து வந்தபோது இருந்த பரிசுத்தமான தன்மை குறைந்துவிட்டது.

இச்சங்கங்கள் செய்துவந்த கடன் கொடுக்கும் வேலைகளை இன்று அரசாங்க நிறுவனங்களான மக்கள் வங்கிகள் செய்துவருகின்றன. ஆயினும் கிராம மக்கள் சுயமாக ஒருவர்க்கொருவர் உதவிபுரியும் புனிதமான கோட்பாட்டின் மீது பரஸ்பரம் ஒருவரை ஒருவர் உணர்ந்து சிறுசிறு தொகைகளை மூலதனமாக வைத்து தேவைப்படும்போது இலகுவாக கடன்பெறக்கூடிய வசதி ஐக்கிய நாணயசங்கங்களில்தான் இருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடக்

(6-ம் பக்கம் பார்க்க)

ஆசிரியருக்குக் கடிதம்:

# ஈழத்துத் தமிழ் நூல்களை இந்தியா வாங்கவேண்டும்

இலங்கையில்அச்சாகும்தமிழ் நூல்கள் தமிழ்நாட்டில் உள்ள மக்களுக்குக் கிடைப்பதில்லை. ஆனால் தமிழ்நாட்டில் அச்சாகும் தமிழ் நூல்கள் இலங்கை மக்களுக்குக் கிடைக்கின்றது. இலங்கைத் தமிழ் நூல்கள் தமிழ்நாட்டில் உள்ளவர்கட்குக் கிடைக்காததன்காரணம், இந்திய இறக்குமதிக் கட்டுப்பாடுகளே. இந்திய மொழியில் அச்சிடப்படும் நூல்களை இந்தியாவிற்குள் இறக்குமதி செய்வதற்குக் கட்டுப்பாடுகள் உண்டு. இதனால் தான் இலங்கைத் தமிழ் நூல்கள் இந்தியாவிற்கு அனுப்பமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் தரமான தமிழ் நூல்கள் தயாராகின்றன. நாவல், சிறுகதை, இலக்கியம்,மொழியியல், அரசியல், வரலாறு, அறிவியல், ஆன்மீகம், தத்துவம், பொருளாதாரம், கணக்கியல் முதலிய துறைகளில் தமிழ்நூல்கள் ஏராளமாக வெளிவருகின்றன. இவை இங்கேயே விற்பனையாகின்றன. இந்தியாவில் இருந்துவரும் தமிழ் நூல்களோடு போட்டிபோட்டுக் கொண்டு விற்பனையாகின்றன. இந்தியாவில் இருந்து ஏராளமாகத் தமிழ் நூல்கள் இலங்கைக்கு வருகின்றன. இப்பொழுது அங்கு சிங்கள நூல்களும் அச்சிடப்பட்டு இங்கு அனுப்பப்படுகின்றன. இந்த வசதியைப் பயன்படுத்தித் தமிழ் எழுத்தாளரும் தமிழ்நாட்டில் தமது நூல்களை வெளியிடுகின்றனர்.

தமிழ்நூல் வர்த்தகம் ஒருவழிப்பாதையாக இருக்காமல் இருவழிப்பாதையாக அமைய வேண்டும். அதுவும் இலங்கைக்கு எதிராக வர்த்தக மேலதிகம் இருக்கும்பொழுது தமிழ் நூல்களை இலங்கையில் இருந்து இறக்குமதி செய்வதை இந்தியா தடைசெய்வது இலங்கைக்கு எதிரான நடவடிக்கை

(5-ம் பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

மற்றவர்களை நம்பாமல் உன்னையே நம்பு. உன் முயற்சியையே நம்பு. தன்னம்பிக்கைதான் உண்மையான மகிழ்ச்சியைத் தருவது.

-மனு

## நாடு நடப்பும்

திருக்கோணமலை, மட்டக்களப்புக்கும் மற்றும் பல இடங்களுக்கும் செல்லும் பஸ் வண்டிகளும்சரி மற்றும் வாகனங்களும் சரி வழியில் முறிகண்டியிலும் ஹபரணைச்சந்தியிலும் சிறிதுநேரம் தரித்துச் செல்வது வழக்கம்.

சமீபத்தில் நான் மட்டக்களப்புக்குச் சென்றபோதும் அங்கிருந்து திரும்பி வந்தபோதும் இந்த இரண்டு இடங்களிலும் பஸ்ஸிலிருந்து இறங்கி தேநீர் அருந்தினேன்.

மட்டக்களப்பிலிருந்து நான் திரும்பிவருகையில் நான் பிரயாணம் செய்த அதே பஸ் வண்டியில் இளம் தலைவர் ஒருவரும் பயணம் செய்தார். ஹபரணைச் சந்தியில் பஸ் நின்றபோது அவர் பஸ்ஸிலிருந்து இறங்கவில்லை. அதற்குக் காரணமும் உண்டு. ஆனால் பஸ்ஸிலிருந்தபடியே அங்குள்ள கடைகளை நன்றாக நோட்டம்விட்டார்.

அந்த பஸ் முறிகண்டியில் நின்றதும் அவர் இறங்கி முறிகண்டிப் பிள்ளையாரைத் தரிசித்துவிட்டு ஒரு தேநீர்க்கடைக்குள் சென்றார். நானும் அங்கு சென்று அவருடன் தேநீர் அருந்திவிட்டு வெளியே வந்தேன். உரியநேரத்துக்கு முன்னதாகவே பஸ் அங்கு வந்துவிட்டதால் சிறிது கூடுதல்நேரம் அங்கு தாமதிக்க நேர்ந்தது.

மதுரை சோமுவின் கச்சேரி, சீர்காழியின் கச்சேரி தொடக்கம் அரசியல் மற்றும் பல விஷயங்கள் பற்றியும் இருவரும் பேசிக்கொண்டோம். சீர்காழி, மதுரைசோமு இங்கு வந்தபோது அவர் "உள்ளே" இருந்தார்.

எங்கள்சம்பாஷணை தேநீர்க்கடைகளைப்பற்றியும் திரும்பியது.

"ஹபறணைச் சந்தி முன்னர் இருந்ததைவிட இப்போது படுமுன்னேற்றம். அங்குள்ள கடைகள் இப்போது சுத்தமாகவும் அழகாகவும் காட்சியளிக்கின்றன, பலவிதமான பொருள்களும் விற்பனைக்கு இருக்கின்றன. பரிமாறுபவர்களும் சுறு சுறுப்புடன் பணியாற்றுகின்றனர். நீங்கள் இதைக் கவனித்தீர்களா?" என்று அந்த இளந்தலைவர் கேட்டார்,

'ம்'என்றுபதிலளித்தேன்.

முறிகண்டியிலும், ஹபறணையைப் போன்றுதான் பிரயாணிகள் தங்கிச் செல்கிறார்கள்; பிள்ளையார் கோயில உண்டியலிலும் காணிக்கை செலுத்துகின்றனர். இங்குள்ள கடைகளிலும் நல்ல வியாபாரமும் நடைபெற்றுக் கொண்டுதானிருக்கிறது" என்று கூறிவிட்டு 'இதையும் கவனித்தீர்களா?' என்று கேட்டார்.

இதற்கும் 'நான் ஆம்' என்று பதில் சொன்னேன். அவர் தொடர்ந்தார்.

'முறிகண்டியில் பிள்ளையார் கோயிலும் அதேபழைய நிலையில் தானிருக்கிறது; இங்குள்ள கடைகளும் அதே பழைய கொட்டில்கள், கட்டிடங்கள், அதேபழைய அழுக்குப்படிந்த மேசைகளும் வாங்குகளும் தான். சிறுமாற்றம். தகரப் பேணிகளுக்குப் பதில் காவிபடிந்த கிளாஸ்கள்' என்று கூறிய அவர்-

'தமிழ்மக்களும் முன்னேற முனைவதில்லை; தமிழரின் தெய்வங்களுக்கும் முன்னேற்றத்தில் விருப்பமில்லைப்போல் என்று முடித்தார்.

முறிகண்டிப் பிள்ளையாருக்கு இது அர்ப்பணம்!

# சரண்சிங்-- ராஜ் வெளியேற்றத்தால் 'ஜனதாவில் பாதிப்பு இல்லை'

## கட்சிக் காரியதரிசி அறிக்கை

புதுடில்லி, ஜூலை, 3

இந்திய அமைச்சரவையிலிருந்து உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங்கும் சுகாதார அமைச்சர் திரு. ராஜ்நாராயண் ஆகியோர் வெளியேற்றப்பட்டதால் கட்சிக்கோ அரசுக்கோ எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை, எதிர்காலத்திலும் படமாட்டாது.

இவ்வாறு ஜனதாகட்சியின் காரியதரிசிகளில் ஒருவரான திரு. ஜ. விஜயசிங் நாகர் தெரிவித்துள்ளார்.

கல்கத்தாவில் இவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

திருவாளர்கள் சரண்சிங், ராஜ்நாராயண் ஆகியோரின் விஷயத்தில் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் நியாயமான நடவடிக்கையே எடுத்துள்ளார். பிரதமரின் நடவடிக்கை ஜனதாகட்சியை மேலும் பலப்படுத்துமே தவிர கட்சியில் எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தாது (இ)

# "எமது பிரசாரங்கள் தேர்தலில்போட்டியிட அல்ல"

### -- ம. வி. முன்னணி பிரமுகர்

(வண்ணார்பண்ணை)

"தமிழ்-சிங்கள மக்கள் மத்தியில் அடுக்கடுக்காக முதலாளித்துவ சக்திகளின் செயற்பாடுகளும் ஆட்சி அதிகாரங்களும் தலைவிரித்தாடிவந்துள்ளதால், நாட்டின் முன்னேற்றமும், நாட்டு மக்களின் ஒற்றுமையையும் சீர்குலைந்துவந்துள்ளன. இந்த நிலையில் தமிழ் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்." இவ்வாறு வேலணையில் நடந்த மக்கள் விடுதலை முன்னணி கருத்தரங்கில் உரையாற்றிய மக்கள் விடுதலை முன்னணி யாழ். மாவட்ட பிரசாரச் செயலாளர் திரு. ஜி. எஸ். பொன்சேகா தெரிவித்தார்.

வேலணை கிழக்கு தேவி கோட்டம் சனசமூக முன்றலில் திரு. சு. துரைராஜா தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் திரு. பொன்சேகா தொடர்ந்து பேசுகையில், "இன்று நாம் தமிழ் மக்கள் மத்தியில் பிரசாரம் செய்வதை சில முதலாளித்துவ அரசியல்வாதிகள் தவருகப் பிரசாரம் செய்யவும் முன்வரலாம். நாங்கள் தேர்தலில் போட்டியிடுவதற்காக எம்மை வளர்த்துக் கொள்ள இங்கு பிரசாரம் செய்யவில்லை என்பதை கூறிக்கொள்கின்றோம்.

இதுகாலவரையும் சிங்கள-தமிழ் முதலாளித்துவ அரசியல்வாதிகளாலும், தலைவர்களாலும் ஏமாற்றப்பட்டு வந்த தமிழ் மக்களுக்குச் சரியான வழியைக் காட்டவேண்டும் என்பதற்காகவே இங்கு தமிழ் மக்கள்முன் தோன்றுகின்றோம். குறிப்பாக இளைய தலைமுறைகளையே நாம் சந்திக்க விரும்புகிறோம். சிங்கள-தமிழ் பழைய அரசியல்வாதிகளால் எமது நாட்டின் எதிர்கால சுபீட்சத்தையோ தமிழ் மக்களின் அபிலாசைகளையோ தீர்த்துவைக்கமுடியாது. உண்மையான ஒரு சோஷலிச ஆட்சியமைப்பின் கீழ் தான் இந்த நாட்டில் உள்ள சகல மக்களின் பிரச்னைகளும் தீர்க்கப்பட முடியும்.

தமிழ் மக்கள் மொழி விடயத்தில், குடியேற்ற விடயத்தில், கலைகலாச்சார பொருளாதார விடயங்களில் பாதிக்

(4-ம் பக்கம் பார்க்க)

## பிரதமரைச் சந்தித்தனர்

புதுடில்லி, ஜூலை 3

ஜனதா கட்சியின் எதிர்காலம் குறித்து நான்கு மத்திய அமைச்சர்களும், நான்கு மாநில முதல்வர்களும் பிரதம மந்திரி திரு. மொரார்ஜி தேசாயை அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடினர்.

பீகார், பஞ்சாப், மத்திய பிரதேசம், மகராஷ்டிரம் ஆகிய மாநில முதல்வர்களும் அமைச்சர்கள் திருவாளர்கள் ஏ. பி. வாஜ்பாய், ஜோர்ஜ் பெர்ணண்டஸ், குண்டஸ், பி. இராமச்சந்திரன், பர்னலா ஆகியோருமே நேற்றுப் பிரதமரைச் சந்தித்தனர். (இ

# ஜனதா அரசிலிருந்து விலக வாஜ்பாய் விருப்பம்

## கட்சியை வலுப்படுத்தும் பணிகளில் ஈடுபட ஆவல்

புதுடில்லி, ஜூலை 3

ஜனதாகட்சி அரசைவிட்டு விலகி தாம் கட்சிப்பணிகளில் தீவிரமாக ஈடுபடப் போவதாக இந்திய வெளிநாட்டு அமைச்சர் திரு. ஏ. பி. வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

தமது இம் முடிவை தாம் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயிடம் ஏற்கனவே தெரிவித்துவிட்டதாகவும் திரு. வாஜ்பாய் அறிவித்துள்ளார்.

தமது தீர்மானம் குறித்து திரு. வாஜ்பாய் வெயிட்டுள்ள அறிக்கையின் விபரம் வருமாறு:-

மிகவும் நெருக்கடியான இன்றைய கால கட்டத்தில் ஜனதா கட்சியை வலுப்படுத்துவது மிக அவசியம் எனவே தான் நான் இம் முடிவை எடுத்துள்ளேன்.

தலைவர்களிடையே அபிப்பிராயபேதம் ஏற்படும் பட்சத்தில் அவை கட்சிக்குள்ளேயே தீர்த்துக் கொள்ளப்படவேண்டும். பகிரங்கபிளவு ஏற்படக் கூடிய விதத்தில் வெளியே நடநது கொள்ளக் கூடாது.

### சரண்சிங்குக்கு அநீதி இழைக்கப் பட்டிருந்தால்.....

உள்துறை அமைச்சராக இருந்த திரு. சரண்சிங்குக்கு ஜனதா கட்சிக்குள் அநீதி இழைக்கப்பட்டிருந்தால் பிரச்னைகளை கட்சிக்குள்ளேயே ஆராய்ந்து அவற்றிற்குத் தீர்வு கண்டிருக்கவேண்டும். (இ)

# சரண்சிங்-ராஜ் ஆதரவு பேரணி

## ஆதரவாளர் தீர்மானம்

புதுடில்லி, ஜூலை 3

ஆளும் ஜனதாக்கட்சி அமைச்சரவையிலிருந்து வெளியேற்றப்பட்ட உள்துறை அமைச்சர் திரு, சரண்சிங், சுகாதார அமைச்சர் திரு, ராஜ்நாராயண் ஆகியோருக்கு ஆதராவாக புதுடில்லியில் பேரணி ஒன்றை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது;

நேற்று புதுடில்லியில் கூடிய இவர்களின் ஆதரவாளர்கள் இம் முடிவை எடுத்தனர்.

திரு. சரண்சிங்குக்கு ஆதரவான எம். பிக்களும் மற்றும் ஆதரவாளர்களும் நேற்று திரு. சரண்சிங்கைச் சந்தித்து உரையாடிய பின்னரே மேற்கண்டவாறு தீர்மானித்தனர்.

### சரண்சிங் ராஜ்நாராயண் தேவிலால்

இதே வேளையில் திரு. சரண்சிங், திரு. ராஜ்நாராயண், ஹரியாளு முதன் மந்திரி திரு. தேவிலால் ஆகியோர் தமது எதிர்காலம் குறித்து நேற்றுக் கூடி ஆராய்ந்தனர். (இ)

# "மேதைகள் பலரை உருவாக்கிய கல்லூரி"

## யாழ். மத்திய கல்லூரிக்கு யோகேந்திரா துரைசுவாமி புகழ்மாலை

(யாழ்ப்பாணம்)

"இலங்கையின் தலைசிறந்த பழம்பெரும்கல்லூரிகளில் ஒன்ருன யாழ். மத்திய கல்லூரி புகழ்பெற்ற அரசியல் பொருளாதார நிபுணர்களையும் சமூக சேவையாளர்களையும் உருவாக்கியதுடன் சர்வதேச அரங்கிலும் புகழ்பெற்ற பல மேதைகளையும் நிபுணர்களையும் ஆக்கித்தந்த பெருமையையும் கொண்டுள்ளது."

யாழ். மத்திய கல்லூரி விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசிய திரு. யோகேந்திரா துரைசுவாமி மேற்கண்டவாறு கூறிஞர்.

கல்லூரி அதிபர் திரு. ஈ. கே. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற விழாவில் திருமதி துரைசுவாமி பரிசில் வழங்கிஞர்.

கல்லூரி பழைய மாணவரான திரு. துரைசுவாமி மேலும் பேசுகையில் கூறியதாவது;-

"சுரங்கத்தைக் குடைபவர்கள் எல்லோருக்குமே மாணிக்கமும், வைரமும் அகப்படுவதில்லை. ஆனல் நற்பேறு உள்ள ஒருவனுக்கே அந்த வாய்ப்புக் கிட்டுகிறது. அதுபோல இந்த நல்ல விழாவிலே பிரதம அதிதியாகக் கலந்துகொள்வதற்கு எனக்கும் எனது மனைவிக்கும் தரப்பட்ட இந்தவாய்ப்பை எனது பெரும்பாக்கியமாகவே நான் கருதுகிறேன்.

"பெற்றதாயும், பிறந்த பொன்னடும், நற்றவ வானிலும் நனி சிறந்தனவே என்றனர் ஆன்றோர். தாயும் நாடும் மட்டுமல்லாமல் கற்ற கலா நிலையமும், வான் வீட்டிலும் சிறந்ததென்று நான் கருதுகின்றேன். இந்தக்கல்லூரியில் நான் பெற்ற கல்விப்பேற்றை எண்ணி இவ்வேளை மனமகிழ்ச்சியுறுவதோடு பழையமாணவன் என்ற உரிமையோடு கௌரவிக்கப்படுவதை நினைத்து பூரிப்படைகின்றேன்.

பல வாரங்களாகப் பயிற்சி பெற்ற திறமை உள்ள வீரர்கள் பங்குபற்றிய ஓர் உன்னதமான விளையாட்டுப்போட்டியை நான் இன்றுகண்டு பேருவகை அடைந்துள்ளேன். இப்போட்டியை அமைத்த அதிபருக்கு ஆசிரியர்களுக்கும் இயக்குநர்களுக்கும் என்மனப் பூர்வமான வாழ்த்துக்கள்.

கல்வியைப் போலவே விளையாட்டும் ஒரு சிறந்த செல்வம் விளையாட்டின் மூலம் ஒழுக்கம், வீரம் உடலுறுதி, ஒற்றுமை, வெற்றியைக்கண்டு குதிக்காமல் தோல்வியைக் கண்டு துடிக்காமல் அமைதி பெறும் சமநிலை முதலிய அரிய பண்புகள் நம்மிடம் வளர்கின்றன என்பதை நாம் மறக்கக் கூடாது என்ருர். (இ)

## தென்லெபனனில் 2 ஆண்டுகளின் பின் கடும் உள்நாட்டு யுத்தம்

பெய்ரூட், ஜூலை 3

தென் லெபனனில் இன்று அரபு சமாதானப் படையைச் சேர்ந்த சிரியத் துருப்புக்களுக்கும் வலதுசாரித் துருப்புக்களுக்கும் இடையே கடும்போர் நடைபெற்றதாகவும் 2 ஆண்டுகளுக்குப்பின் நடைபெற்ற கடும் உள்நாட்டுச் சண்டை இது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது நாளாகத் தொடர்ந்து நடைபெற்ற இச் சண்டையை அடுத்து தென் லெபனன் துறைமுக நகரம் தீப்பற்றி எரிகிறது என்றும் பெருங் கட்டடங்கள் சேதமடைந்தன என்றும் அறிவிக்கப்பட்டது.

இன்று அதிகாலையிலேயே இச்சண்டை தீவிரமடைந்து விட்டது. இச் சண்டையில் உயிர்துறந்தோர் எண்ணிக்கை குறித்து உடன் அறிவிக்கப் படவில்லை. (இ)

## கூட்டணியின் தலைவர் 'அமிர்' உபதலைவர் 'இராசு'

### கூட்டணிக் கிளைகள் ஆவல்?

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் புதிய தலைவராக காங்கேசன்துறை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கத்தையும், உபதலைவராக மட்டக்களப்புமுதலாவது எம். பி. திரு. செ. இராசதுரையையும் போட்டியின்றித் தெரிவுசெய்வதற்கு வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பு ஆகியவற்றைச் சேர்ந்த கூட்டணிக் கிளைகள் விருப்பம்கொண்டு விண்ணப்பங்களை அனுப்பிவைத்துள்ளனவாம்.

கூட்டணியின் இலட்சியங்களை வென்றெடுப்பதற்கு, கூட்டணி வட்டாரங்களில், போட்டி மனப்பான்மையைத் தவிர்த்து, ஒற்றுமையின் அடிப்படையில் செயல்படவேண்டுமென இளைஞர் பேரவையும் மகளிர்பேரவையும் ஒவ்வொரு கூட்டணிக் கிளைகளையும் கோரிவருகின்றன.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் முதலாவது தேசிய

(6-ம் பக்கம் பார்க்க)

## தென்யேமன் ராஜதந்திர உறவுகள் துண்டிப்பு

### அரபுலீக் தீர்மானம்

கெய்ரோ, ஜூலை 3

தென்யேமனுடனன சகல ராஜதந்திர உறவுகளையும் உடன் நிறுத்திக்கொள்வதென அரபு லீக் நாடுகள் தீர்மானித்துள்ளன.

வடயேமன் ஜனதிபதி லெப்டினன்ட் கேணல் அஹ்மது ஹுசைன் அல்காஷ்மி கொலைக்கு காரணமாக இருந்தமையினலேயே தென்யேமனுடனன ராஜ தந்திர உறவுகளை நிறுத்துவதென்று அரபு லீக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.

கெய்ரோவில் அரபுலீக் கூட்டம் மிக இரகசியமாக நடைபெற்றது. (இ)

## படகு விபத்தில் 13 பேர் பலி!

புதுடில்லி, ஜூலை 3

ஒரிஸ்ஸா மாநிலத்தில் நேற்று நிகழ்ந்த படகு விபத்தில் 13 பேர் பலியாகினர் என்று அறிவிக்கப்பட்டது. (இ)

# கூட்டுறவு இயக்கம் புனிதத்துவம் மிக்கது

(பண்டிதர் ஆசிநாதர்)

ஆடி மாதம் 1ம் நாள், அகில அகில உலகக் கூட்டுறவுத் தினம். உலக நாடுகள் அனைத்தும் கூட்டுறவுத் தினத்தைப் பெரும் பேறென ஏற்றுப் பெருமிதத்துடன் கொண்டாடுகின்றன.

உலகளாவிய வகையில் ஏற்றுக்கொள்ளப்படும் கூட்டுறவு இயக்கம், உலகமெங்கணும் உறுதிப்படுத்தப்பட்ட புனித இயக்கமாக மிளிர்ந்துவருகின்றது.

கூட்டுறவு என்ற சொல், பரந்த-விரிந்த-ஆழ்ந்த கருத்தினைக் கொண்டது. கூட்டுறவு இயக்கம் மிகப் புனிதமானது. கூட்டுறவு இயக்கத்தின் கோட்பாடுகளும், குறிக்கோள்களும் புனிதமானவை. கூட்டுறவு என்னும் சொற்பதத்தினுள் ஒன்ருக இணைந்து செயற்படுதல் என்னும் கருத்து புதைந்து காணப்படுகிறது.

தனி மனிதன் ஒருவன், தன்னையொத்த அயலாரையும் கூட்டிச் சேர்த்துச் செயற்பட வைக்கும் சிறந்த அமைப்பே கூட்டுறவு இயக்கமாகும். பலர் சேர்ந்து கூடி, உழைப்பின் மீது கட்டியெழுப்பும் செயற்பாடே கூட்டுறவு இயக்கமாகும்.

மக்களுக்காக, மக்களால் அமைக்கப்பட்டு, மக்களால் நடத்தப்பட்டுவரும் இயக்கமே கூட்டுறவு இயக்கமாகும்.

கூட்டுணர்வைத் தூண்டுதலாகக்கொண்டு, மனிதர் பலர் கூடி, பொருளாதாரம், சமூக முன்னேற்றம் என்பவற்றை ஏற்படுத்திக் கொள்வதற்காக, சுதந்திரம், சகோதரத்துவம், சமத்துவம் போன்ற இலட்சியங்களின் அடிப்படையில் ஏற்படுத்திக்கொள்ளும் சீரிய அமைப்பே கூட்டுறவு இயக்கமாகும். மக்கள் சுயேச்சையாக - தன்னிச்சையுடன் -மனிதன் என்ற வகையில் சம உரிமைகளுடன் தாமாகவே சில பொதுநலன்களைப் பெறுவதற்காக ஒன்றுசேரும் ஒற்றுமை ஒன்றியமே கூட்டுறவு இயக்கயாகும்.

அமைப்பு முறையிலான கூட்டுறவு இயக்கம் ஐரோப்பாவில் 'ரொச்டேல்' முன்னோடிகளால் ஆரம்பிக்கப்பட்டது. இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற் புரட்சியின்போது, 28 தொழிலாளர்களுடன் கூட்டுறவு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இது தொடர்ந்து ஜெர்மனி, டென்மார்க், சுவீடன், சுவிட்சர்லாந்து, ஜப்பான் போன்ற நாடுகளிலும் தீவிர வளர்ச்சி பெற்றுவந்தது. இன்று உலக நாடுகள் அனைத்திலும் அறியப்பட்ட நல்லியக்கமாகவே வளர்ந்து வருகிறது.

கூட்டுறவு இயக்கம், நம் இலங்கையில், முன்பு தேசாதிபதியாயிருந்த சேர் ஹென்றி மக்கலம் காலத்தில் 1911ம் ஆண்டில் அறிமுகஞ்செய்து வைக்கப்பட்டது. இங்கு முதலில் ஐக்கிய நாணய சங்கள்கள் எனப்படும் கடனுதவிச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. பின் கூட்டுறவுப் பண்டசாலைச் சங்கங்கள் உருப்பட்டன. பல நோக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பட்டன. கூட்டுறவுச் சமாசங்கள், மேற்பார்வைச் சபைகள், கூட்டுறவு வங்கிகள் அமைக்கப்பட்டன. கூட்டுறவுச் சட்டங்கள் திருத்தஞ்செய்யப்பட்டுச் சீரமைக்கப்பட்டன. கூட்டுறவு இயக்கம், சீரமைப்பு, புனர் சீரமைப்பு, மறுசீரமைப்பு என்ற நியதிகளில் பல மாற்றங்களும், திருத்தங்களும் செய்யப்பட்டு வளர்ச்சியுற்றது.

இலங்கையில் கூட்டுறவு முறை, இன்று மக்களிடையே பிரபல்யம் பெற்று, ஒரு தனியிடத்தைப் பிடித்து, தனிக் கணிப்பைப் பெற்று மிளிர்ந்து வருகிறது.

இக்கூட்டுறவு இயக்கம், நம் மக்களிடையே சமத்துவத்தையும், அந்நியோன்னியத்தையும், பரஸ்பர உதவியையும், நேர்மையையும், நீதியையும், ஒற்றுமையையும், பொதுநலத்தையும் வளர்த்துவருகிறது. நம் நாட்டில், சிங்களவர், தமிழர், முஸ்லீம் என்ற பேதமின்றி-எல்லோரும் இந்நாட்டு மக்கள் என்ற பொது எண்ணத்தை ஏற்படுத்தி, இன, மத, மொழி ஒற்றுமைக்கு இக்கூட்டுறவு இயக்கமே வித்திட்டிருக்கின்றது.

வளர்க கூட்டுறவு இயக்கம்.

---

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய்த் தொகுதியில் கிராமங்கள் தோறும் மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். மாவட்டப் பிரசார அமைப்ளர் திரு. ஜி. எஸ். பொன்சேகா, திரு. இரத்தினம் லக்ஷ்மிகாந்தனின் ஒத்துழைப்புடன் பரவலாகக் கருத்தரங்குகள் நடத்திவருகிறார். (உ)

---

## மாடு திருடினராம்: இருவர் கைது

(கொடிகாமம்)

மட்டுவிலைச் சேர்ந்த எம். தில்லைநாதன் என்பவருக்குச் சொந்தமான இருமாடுகள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் என். சிவபாலன், ஆனந்தராஜா என்னும் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை றிமாண்டில் இம் மாதம் 12ம்திகதிவரை வைக்குமாறு சாவகச்சேரி நீதவான் திரு. கே. பாலகிட்ணர் உத்தரவிட்டார். (உ)

---

## இந்துமாமன்ற 23வது வருட நிறைவு

(கொழும்பு)

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் 23வது மகா சபைக்கூட்டம் எதிர்வரும் 9-ம்திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. (உ)

---

## எமது...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுவதை நாங்கள் உணர்கின்றோம். இதை தேசிய நல்லெண்ணத்துடன் மனிதாபிமான நோக்குடனும் தீர்த்து வைக்கும் துணிவு, சக்தி, எண்ணம் இதுவரை இந்த நாட்டில் ஆட்சியில் இருந்த சிங்களத் தலைவர்களுக்கோ அல்லது வகுப்புவாதத்தைக் கிளறி ஆட்சியைப் பிடித்துவந்த அரசியல்வாதிகளுக்கோ கிடையாது, இதனால்தான் நாம் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கி இந்த நாட்டிலுள்ள சகல மக்களின் பிரச்னைகளையும் தீர்க்க முன்வரவேண்டும்'' என்றார்.

திரு. பொன் தியாகராஜா பேசுகையில், ''ஒவ்வொருஇனமும் வாழும் பிரதேசங்கள் அந்தந்த இனங்களால் ஆளப்படவேண்டும். தமிழ் மக்கள் இதுவரை ஐக்கிய இலங்கையையே விரும்பிவந்தனர். ஆனல் கடந்த காலங்களில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்களக் கட்சிகள் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்திவந்த பயங்கர துன்பங்களையும், பறித்தெடுத்த உரிமைகளையும், தாங்கமுடியாத நிலையிலேயே இன்று ஐக்கிய இலங்கையில் வெறுப்புக்கொண்டு தனி நாடு காணும் அவாவை தமிழர் கொண்டுள்ளனர். இந்த நிலைக்கு இந்த நாட்டிலிருந்து வந்த ஆட்சியாளர்களே காரணகர்த்தாக்களாவர்' என்றார். மற்றும் சிலரும் உரையாற்றினர். (உ)

---

## ஈழத்துத்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யாகவே கொள்ளவேண்டும். சிறப்பான சிங்கள நூல்கள் கூட இந்தியாவில் இருந்து இறக்குமதிசெய்யப்படுமாயின் ஏன் தமிழ்நூல்களை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாது?

ஆண்டுதோறும் நடைபெறும் இலங்கை- இந்திய வர்த்தகப் பேச்சுவார்த்தையின்போது தமிழ்நூல்களை இலங்கையில்இருந்து ஏற்றுமதி செய்யக்கூடிய வாய்ப்புகள் பற்றி இலங்கை அரசு இந்திய அரசுக்கு வலியுறுத்தவேண்டும்.

மிஞ்சி மிஞ்சிப்போனல் ஒரு லட்சம் ரூபாய் பெறுமதியான புத்தகங்கள் இந்தியாவுக்கு ஏற்றுமதியாகுமா? இச்சிறு தொகைக்கு இந்தியா தடை போடுவானேன்? இலங்கை அரசு இதுபற்றி மிக அக்கறையுடன் நோக்கவேண்டும். பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளும் இலங்கை அரசின் அதிகாரிகள் இதைக் கவனிப்பார்களா?

க, சச்சிதானந்தன்
செயலாளர்,
தமிழர் பொருளாதார
இயக்கம்
யாழ்ப்பாணம்.

---

## ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர்

- முல்லைமணி -

(சரித்திரப் பிரசித்தி பெற்ற ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலய திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது)

ஒட்டு சுட்டானில் தான்தோன்று யாகியே
உலகம் உயர்ந்திட வந்த பரமனார்
தட்டிலாத கருணை யுடையவர்
காண்பவர்க் கின்ப வீடளிக் கின்றவர்
மட்டுசேர் கொன்றைப் பூவை யணிபவர்
மாந்தருக்கு வைத்திய நாதராய்
தொட்ட நோய்களை நீக்கி யருளுவர்
தொன்மை யானதோர் லிங்கமாய்த்
தோன்றியே.

ஆனி மாதத்த மாவாசை யிற்கொடி
அடுத்த பூரணை தீர்த்தமென் வைபவம்
தேனை யொத்தவர் தான்தோன்றி ஈஸ்வரர்
சென்றவர்க்கருள் செய்கின்ற செம்மையால்
சேனை தோற்றிடப் பல்லிடத் தாலுமே
சிவனை நோக்கியே வந்து குவிந்திடல்
மானும் ஈன்றவள் விமலை என்தந்தை
மருவி னோர்க்கருள் சுரந்திடு வாரென்றே

திண்ணம் தேரின் வடத்தினைக் கையினால்
தொட்டிழுத்திடும் பக்தர்க் கருள்தரல்
கண்ணில் தேரினைக் கண்டவர் கையினால்
கடவுள்தன்னை இறைஞ்சியே போற்றுவர்
எண்ணி லாததெங் கின்கனி தன்னையே
எடுத்து டைத்துத்தம் நேர்த்தியைச்
செய்குவர்
மண்ணில் மாந்தா இறையருள் பெற்றிடு
மார்க்கம் கண்டிட வாருமொட் டுசுட்டான்

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சிவகுமார்-ஜெய்சித்ரா
வெள்ளிக்கிழமை
விரதம்

நாகம்ஸ்
(சுன்னகம்)
தினசரி 6-45, 10-00
முத்துராமன் - சுஜாதா
முத்தான
முத்தல்லவோ

Rio (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
PERCY
(Adu'ts only)
From tomorrow
SPYS

சாந்தி யாழ். நகர் போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45,
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா-அசோகன்-மனோகர்-சோ
கணவன் புத்தம் புதிய பிரதி

REGAL Daily at 4-45, 7- & 9-30 P. M. only.
KEN CLARK in
Road To Fort Alamo
(Scope Color)

மனோகரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரஞ்சன்-அஞ்சலிதேவி
நீலமலைத்திருடன்
5-7-78 முதல்
அபூர்வ ராகங்கள் (புத்தம் புதிய பிரதி)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ராமராவ்-ராஜசுலோசனா
ராஜமகுடம்

லிடோ
(யாழ்.நகர்)
போன்: 7692
சிவகுமார், அல்கா
மதனமாளிகை

ராணி
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-சோ
சௌகார்ஜானகி-சுந்தரராஜன்
நடித்த
பேரும் புகழும்

ராஜா
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்-ரஜனி-ஆலம்
சுதா-வை. விஜயா
நடித்த
மன்மத லீலை
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கடைசி 3 தினங்கள்
முத்துராமன்-சந்திரகலா-ஸ்ரீவித்யா
நடித்த
காலங்களில் அவள் வசந்தம்

# "தீவுப்பகுதி வரவிரும்பினுல் உடன் இடமாற்றம்

## வெளிமாகாண ஆசிரியர்களுக்கு பண்டிதர் கா. பொ. அழைப்பு

(யாழ்ப்பாணம்)

'வெளிமாகாணங்களில் கடமையாற்றும் ஆசிரியர்கள், தீவுப்பகுதியில் சேவையாற்ற விரும்பினுல், அவர்களுக்கு உடனடியாக இடமாற்றம் பெற்றுக் கொடுப்பேன்' என்று காவலூர் நாடாளுமன்ற உறுப்பினர், பண்டிதர் கா. பொ. இரத்தினம், நாரந்தனே ரோமன் கத்தோலிக்க கனிஷ்ட வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

விளையாட்டுப் போட்டியை புங்குடுதீவு வட்டாரக் கல்வியதிகாரி இரு. க. குகதாசன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். கல்லூரிக் கொடியை நாரந்தனே பங்குத் தந்தை வண. ஸி. எஸ். குரூஸ் ஏற்றிவைத்தார். பண்டிதர் கா. பொ. இரத்தினம் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

'இவ்வித்தியாலயத்தை, மகா வித்தியாலயமாக தரமுயர்த்துவதற்கு நான் உடனடி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளேன். பொதுவாக இந்நடவடிக்கைகள் பலனளிப்பதற்கு, தீவுப்பகுதியில் ஆசிரியர் பற்ருக்குறை நிலவுகின்றது. இக்குறையைப் போக்குவதற்கு சொந்த நாட்டிலேயே சேவை மனப்பான்மையுடன் சேவை செய்யும், வெளிமாவட்ட ஆசிரியர்கள் இடமாற்றம் கோரி விண்ணப்பித்து, என்னுடன் தொடர்பு கொண்டால் நான் அவர்களுக்கு தீவுப்பகுதிக்கு இடமாற்றம் பெற்றுக் கொடுப்பேன்.'

தலைமையுரை நிகழ்த்திய புங்குடுதீவு வட்டாரக் கல்வியதிகாரி, திரு. க. குகதாசன் மாணவர்களிடையே நடைபெறும் இல்ல விளையாட்டுப் போட்டிகள் ஏற்ற தாழ்வுகளை அகற்றி சோஷலிஸ சமுதாயத்தை கட்டிவளர்க்கும் பணியில் மாணவர்களைத் தூண்டுகின்றன. இளம் சந்ததிகளை நாளைய சமுதாயமாக்கும் சீரிய பணி ஆசிரியர்களையே சாரும். இப்பாடசாலையில் வருடந்தோறும் இல்ல விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதற்கு இக்கல்லூரி அதிபர், பெரும் சிரமப்பட்டு வெற்றி கண்டு வருகின்ருர். அன்ருரது அயராத முயற்சி தீவுப்பகுதிப் பாடசாலைகளுக்கு முன்ருேடியாக அமைவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்' என்று கூறிஞர்.

இல்லங்களிடையே நடைபெற்ற போட்டிகளில் செண். திரேசா இல்லம் அதிக புள்ளிகளைப் பெற்று முதலிடத்தை பெற்றுக் கொண்டது. வெற்றி பெற்ற வீரர்களுக்கு பண்டிதர் கா. பொ. இரத்தினம் பரிசில்களை வழங்கிஞர். (கெ)

## நாட்டின்...

(2-ம் பக்கத் தொடர்சி)

கூறிஞர்.

கிழக்கு மாகாணத்திற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட அமைச்சர் பெரேரா, இங்குள்ள மீன் பிடிக்கும் இடங்களை நேரில் பார்வையிட்டார். (இ)

## கூட்டணியின்...

(-4ம் பக்கத் தொடர்ச்சி)

மாநாடு திட்டமிட்டபடி இம்மாதம் 29ம் 30ம் திகதிகளில் ஆவரங்காலில் நடைபெறுவதால் புதிய தலைவர் செயலாளர், பொருளாளர் தெரிவு வவனியாவில் இம்மாதம் 15ம் திகதி கூடும் பொதுச்சபையின் வாக்கெடுப்பின் அடிப்படையில் நடைபெறும். இதற்கான விதிமுறைகள் அடங்கிய விபரக்கோவை ஏற்கனவே சகல கூட்டணிக் கிளைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (கெ)

## நாணயம்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கூடாது.

துரதிர்ஷ்டவசமாக கடந்த அரசாங்கத்தின் பதவிக்காலத்தில் கூட்டுறவு இயக்கம் சீரழிக்கப்பட்டு பின்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அரசாங்கம் விரும்புவதை செய்யக்கூடியவகையில் தனதுகையாட்களை கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகிகளாக்கி நாசப்படுத்தியது. அரசாங்க அமைச்சர்களை வரவேற்கும் மேடைகளாக கூட்டுறவுச் சங்கங்களை அந்த நிர்வாகிகள் பயன்படுத்திஞர்களே ஒழிய பொதுமக்களுக்குப் பயன்படுமாறு எதுவும் செய்யவில்லை. கொள்ளையடிப்பவர்களின் கூடாரமாக விளங்கிய இச்சங்கங்களிஞல் கூட்டுறவு இயக்கத்தின் புனிதமான நிலைமை அற்றுப்போய் மக்களின் நம்பிக்கையை இழக்கும் நிலை ஏற்பட்டது. இன்று அந்தச் சிக்கலான நிலைமையிலிருந்து கூட்டுறவுச்சங்கங்களை மீட்க அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. கூட்டுறவு இயக்கத்தை மறுசீரமைத்து மக்களிடம் மீண்டும் கையளிக்கும் வரை பாராளுமன்ற உறுப்பினர்களின் சிபார்சின்பேரில் நியமிக்கப்பட்ட இயக்குநர் சபைகள் மூலம் நிர்வாகம் நடாத்தப்பட்டு வருகின்றது' என்ருர்.

### கூட்டுறவு செயலாளர் உரை

யாழ்ப்பாணம் தேசியகூட்டுறவுச்சபை செயலாளர் திரு. க.கணேசலிங்கம் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

''ஐக்கியநாணய சங்கங்கள் எமது முன்ஞேர்கள் எமக்கு விட்டுச்சென்றுள்ள பெரும் சொத்தாகும். அழிந்துபோகும் நிலையிலிருக்கும் இச் சங்கங்களுக்கு புத்துயிர் கொடுத்து வளரவைக்கவேண்டியது எமது இளம் சந்ததியினரின் கடமையாகும். கடன் எடுப்பதையே நோக்கமாகக்கொண்டு இந்தச் சங்கங்களில் சேராது கிராமிய மட்டத்தில் எமக்குத்தேவைப்படும் உதவிகளை கூட்டுறவு அடிப்படையில் பெற்றுக் கொள்ளும் உயரிய மனப்பான்மையுடன் இச்சங்கங்களில் உறுப்பினராகச் சேர்ந்து சேவையாற்றவேண்டும். நமக்குக் கடன் தேவையானநேரத்தில் மட்டும் சங்கத்தை நாடிச் சென்று தேவையைப் பூர்த்தி செய்தபின்பு உதாசீனம் செய்யும் மனப்பான்மை எம்மை விட்டு அகலவேண்டியது அவசியம். கிராமங்களில் ஒற்றுமை மனப்பான்மையை வளர்க்கவும், புதிய தலைவர்களை உருவாக்கவும் இச்சங்கங்கள் பெரும் பணியாற்றவல்லன' என்ருர்.

தலைமைக்காரியாலயப் பரிசோதகர் திரு. எஸ். ஈ. யோசேப், அளவெட்டி தெற்கு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு.ப. இறைகுமாரன் உட்படப் பலர் உரையாற்றிஞர்கள். அருட்கவி சீ. விநாசித்தம்பி வாழ்த்துப்பா பாடிஞர். சங்கப்பொருளாளர் திரு. ச. இராசநாயகம் நன்றிகூறிஞர். [உ]

# "நாடகங்கள் வெறும் பொழுதுபோக்குக்காக என்னும்நிலைமாறவேண்டும்

## மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர்

(யாழ்ப்பாணம்)

''வெறும் பொழுதுபோக்குக்காக என்று இல்லாமல் வளர்ந்துவரும் மாணவர்களின் உணர்வுப்பண்பாட்டை கருவாக வைத்து நாடகங்கள் கல்லூரிகளில் இடம்பெற வேண்டும்'' என்று மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் திரு. என். பேராயிரவர் கல்லூரி நாடகவிழாவில் தலைமை வகித்து உரையாற்றுகையில் கூறிஞர்.

யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. பி. ஜெகநாதன் இரண்டாம்நாள் நாடகவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

மாணிக்கர் இல்லத்தின் ''கரங்கள் காக்கட்டும்'' என்ற நாடகம் முதலாமிடத்தையும், சுந்தரர் இல்லத்தின் ''நீறுகள்'' என்ற நாடகம் இரண்டாமிடத்தையும் சம்பந்தர் இல்லத்தின் ''மாரீசமயக்கம்'' என்றநாடகம் மூன்ரும் இடத்தையும் பெற்றன, (உ)

## மேயர் துரையப்பா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அருகில் வந்து, ''சுட்டுவிடுவோம் ஓடிவிடு'' என்று பயமுறுத்தினர். நான் பயத்திஞல் அங்கிருந்துஓடிவிட்டேன். அவர்கள் எமது காரைக் கொண்டுபோய் விட்டார்கள். ஐயாவை எடுத்துச்செல்ல அங்கு வாகனமோ, அல்லது சைக்கிளோ இருக்கவில்லை. பின்னர் மூளாய் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்ரேம். செல்லும் வழியில் அவர் காலமாஞர்.''

### அடையாளம் காட்டிஞர்

இக்கட்டத்தில் எதிரிகளைச் சுட்டிக்காட்டி, எதிரிகளை அடையாளம் காட்டமுடியுமா என்று கேட்கப்பட்ட போது முதலாவது எதிரி கலாபதியையும் இரண்டாவது எதிரி கிருபாகரனையும் சாட்சி அடையாளம் காட்டிஞர்.

### குறுக்குவிசாரணை

இதனைத் தொடர்ந்து சிரேஷ்ட சட்டத்தரணி திரு. எம். சிவசிதம்பரம் சாட்சியை குறுக்குவிசாரணைசெய்தார்.

சட்டத்தரணி: கிங்ஸ்ஹவுஸுக்கு நீர் போயிருக்கிறீரா?

சாட்சி: போயிருக்கின்றேன்.

சட்: எப்போது?

சாட்சி: 1975ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6ம் திகதி.

சட்; இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையிடம் நீர் வாக்குமூலம் அளித்தீரா?

சாட்சி: இல்லை.

சாட்சி: இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையை உமக்குத் தெரியுமா?

சாட்சி: தெரியாது.

சட்: இன்ஸ்பெக்டரை உமக்குத் தெரியாது என்று கூறுகிறீர். ஆனல், இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையிடம் வாக்குமூலம் அளித்தீரா என்று கேட்டபோது இல்லை என்று கூறினீர். அவரைத் தெரியாமல எப்படி நீர் இப்படி பதிலளிக்க முடியும்?

சாட்சி: இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையை எனக்குத் தெரியும்.

(சட்டத்தரணியின் கேள்விகளுக்கு சாட்சி பல தடவைகளில் மௌனம் சாதித்தார்.)

சட்: கொழும்பில் நீர் எங்கு இருக்கிறீர்.

சாட்சி: மச்சான் வீட்டில்.

சட்: மச்சான் வீடு என்ருல் எங்கு?

சாட்சி: வெள்ளவத்தையில்.

சட்: வெள்ளவத்தையில் என்ருல் எங்கு?

சாட்சி: வெள்ளவத்தை டவுனில்.

சட்: டவுஞ? விலாசம் இல்லையா?

சாட்சி: விலாசம் [illegible] தெரியாது.

### எதிரிகள் சார்பாக

1-வது எதிரி சார்பில் திரு. எம். சிவசிதம்பரமும், 2-வது எதிரி சார்பில் திரு. செருபீமும், திரு. புள்ளைநாயகமும், 3-வது எதிரி சார்பில் திரு. ஏ. மகேந்திரராசாவும், 4-வது எதிரி சார்பில் திரு. வ. ந. நவரத்தினமும், 5-வது எதிரி சார்பில் திரு. சிற்றம்பலமும் ஆஜராஞர்கள். இவர்களுக்கு உதவியாக சட்டத்தரணிகள் கே. துரைரத்தினம், நீலன் திருச்செல்வம், திரு. சந்திரகாசன், திரு. கனக மகேசன், திரு, சாந்தினி ஞானசேகரன் உட்பட பல சட்டத்தரணிகள், சட்டத்தரணி திரு. சுமந்திரன் அனுசரணையுடன் ஆஜராஞர்கள்.

குறுக்கு விசாரணை இன்று தொடர்ந்து நடைபெறும். (ம)

## தந்தை செல்வா நினைவுதினக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வா நினைவுதினக்கூட்டம் உடுப்பிட்டி தெற்கு தமிழ் இளைஞர் பேரவையினரின் ஆதரவில் இம்மாதம் 25-ந் திகதி வல்வெட்டியில் நடைபெறவிருக்கிறது. தமிழர்விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் உரை நிகழ்த்துவார்கள். (க)

## 'மினி பீச்' நாளை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நகர மண்டபத்திற்கருகில் அமைக்கப்பட்ட நவீன 'மினி பீச்' நாளை மாலை முன்ஞள் மாநகரவிசேட ஆணையாளர் திரு. ஏ. ஏ. ஜோசப்பினுல் திறந்துவைக்கப்படவிருக்கிறது. (க)

## அன்னதான மடம் நிறுவுவர்

(வண்ணுர்டண்ணை)

மண்டைதீவு கண்ணகை அம்மன் கோவில் முன்றலில் அன்னதான மடம் ஒன்று கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாலய பொங்கல் விழாவின்போது இதற்கான அத்திவாரக்கல்நாட்டு வைபவம் இடம்பெற்றது.

அல்லைப்பிட்டியைச் சேர்ந்த இராசரத்தினம் பாலச்சந்திரன், கிளிநொச்சியைச்சேர்ந்த இரத்தினசிங்கம் சரவணபவானந்தன், விசுவமடுவைச் சேர்ந்த எஸ் செல்லத்துரை ஆகியோர் இதற்கானஅத்திவாரக் கல்லை நாட்டினர்.

இவ்வாலய நிர்வாகிகளின் ஆதரவுடன் இவர்கள இந்து மண்டபத்தைக் கட்ட முதவந்துள்ளனர். இவற்றுடன் இவ்வாலயத்துடன் இணைக்கவுள்ள பிள்ளையார் கோவில் வயிரவர் கோவில்களுக்கான அடிக்கல்நாட்டும் நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன, வயிரவர்கோவில் அத்திடாரக் கல்லை ஆலய தர்மகர்த்தாசபையினரின் சார்பில் ஆலய பூசகர் திரு. கு. கனகரத்தினமும் பிள்ளையார் ஆலயத்திற்கான அடிக்கல்லை திரு. நா. கி. தனஞ்செயனும் நாட்டினர். (உ)

# "கிராமங்களை முதலில் அபிவிருத்தி செய்வோம்"

(வண்ணுர்பண்ணை)

''கிராம ரீதியாக அடிமட்டத்திலிருந்து அபிவிருத்தியை ஏற்படுத்துவதன் மூலமே எமது நாட்டை நாம் வளமடையச் செய்யமுடியும். இதற்கு கிராமஅபிவிருத்திச் சங்கங்கள் தம்மாலான முழுக் கடமைகளையும் செய்யமுன்வர வேண்டும்'' என்று ஊரெழு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புனரமைப்புப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய இச்சங்கத்தின் தலைவர் திரு. இ. கிருஷ்ணபிள்ளை தெரிவித்தார்.

ஊரெழு மாதர் முன்னேற்றச் சங்கமண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கோப்பாய் பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. பெடரிக், கிராமசேவை அலுவலர் திரு. கிருஷ்ணராசா ஆகியோரும் கலந்துகொண்டனர். திரு. கிருஷ்ணபிள்ளை தொடர்ந்து பேசுகையில், கிராமங்கள் தோறும் நாம் அபிவிருத்தியை கண்டால்தான் எமது நாட்டில் நாம் சுபீட்சத்தைக் காணமுடியும், தமிழ் இனத்தைப் பொறுத்தவரையில் இது முக்கியமானதாகின்றது. எனவே எமது நாட்டின் முன்னேற்றத்திற்கும் வளர்சிக்கும் இச்சங்கங்களின் பணி முக்கியமாகின்றது என்ருர்.

இக்கூட்டத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரால் புதுவருட நிர்வாகிகள் தெரிவும் நடத்தப்பட்டது. பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரியப்பட்டனர். தலைவர்: திரு.இ. கிருஷ்ணபிள்ளை, உபதலைவர்: திரு. க. சின்னத்துரை, செயலாளர்: திரு. இ. சேஞதிராசா, உபசெயலாளர்: திரு. ப. பரமநாதன், பொருளாளர்: திரு. த. தம்பிராசா, ஆறுபேர்கொண்ட செயற்குழுவும் தெரியப்பட்டது. (உ)

கந்தர்மடம்

## ஸ்ரீசித்திவிநாயகர் ரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண் கிழக்கு கந்தர்மடம் ஸ்ரீசித்திவிநாயகர்ஆலய ரதோற்சவம் இன்று நடைபெறுகிறது.

இன்று பிற்பகல் 3 மணியளவில் நடைபெறும் அபிஷேகத்தைத் தொடர்ந்து ஏழு மணிக்கு விநாயகப்பெருமான் இரதத்தில் எழுந்தருளுவார். அளவெட்டி என். கே. பத்மநாதன் கோஷ்டியுடன் மற்றும் விசேஷ மேளக்கச்சேரிகளுடன் விநாயகப்பெருமான் வீதி வலம் வருவார்.

## நல்லை ஆதீனத்தில் கார்த்திகைவிழா

[யாழ்ப்பாணம்]

அகிலஇலங்கை திருப்புகழ் மாமன்றம் நல்லை ஆதீனத்தில் மாதந்தோறும் நடத்திவரும் கார்த்திகைவிழா கடந்த சனிக்கிழமை வண்ணை வீரமாகாளியம்மன் சபை சார்பில் செல்விகள் சி. விஜித்தா, ஆ. கலோச்சநா ஆகியோரின் இறைவணக்கத்துடன் ஆரம்பமானது. இச்சபையைச் சேர்ந்த செல்வி இ. சௌரிகாந்தி சிறப்பானமுறையில் சிற்றுரை நிகழ்த்தி சபையோரின் பாராட்டைப் பெற்றுக்கொண்டார். கந்தபுராணபடனத்தில் முருகனின் திருவிளையாடல்கள் பற்றி பாடல்கள் பாடப்பெற்று பொருள் கூறப்பட்டது. இவ் விழாவுக்கு திரு. கனகரத்தினம் தலைமைவகித்தார்.

## தவறவிடப்பட்டது

பெண்கள் கைப்பை ஒன்று கைதவறவிடப்பட்டு எடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் Francis Antony கிடுவாவை ஒழுங்கை, கோப்பாய் என்னும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம். 7938

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஜூலை மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No: 49, Jaffna - Telegram Ealanaadu - Telephone: 389 - Registered as News paper in Sri Lanka.